
(பதிப்புரிமையுடையது)

உ

சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு

அகில இலங்கை

6 சைவசமய பாடப்பரீட்சை : 2022

தரம் ஆறு



nselva.com

கால அளவு	1.30 மணி

புள்ளிகள் : 100

இல.	
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. பின்வரும் பெயர்களுள் விநாயகரைக் குறிக்கும் பெயர் எது?
   1) கஜமுகன் 2) ஆதிசேடன் 3) குபேரன் 4) சர்வேஸ்வரன்
2. சைவ சமயத்தவரின் முழுமுதற் கடவுள் யார்?
   1) விஷ்ணு 2) விநாயகர் 3) சிவபெருமான் 4) முருகன்
3. பஞ்ச புராணங்களில் மூன்றாவதாக ஓதப்படுவது எது?
   1) பெரியபுராணம் 2) திருப்பல்லாண்டு 3) திருவாசகம் 4) திருவிசைப்பா
4. தோத்திரங்கள் ஓத முன் சொல்ல வேண்டியது
   1) எல்லோரும் வாழ்க 2) திருச்சிற்றம்பலம் 3) ஓம் நமசிவாய 4)இன்பமே சூழ்க
5. உத்தூளனமாக தரிக்க வேண்டிய சிவ சின்னம் எது?
   1) விபூதி 2) சந்தனம் 3) குங்குமம் 4) பூமாலை
6. ‘‘பாலபாடம்” என்ற நூலை எழுதியவர் யார்?
   1) விவேகானந்தர் 2) ஆறுமுகநாவலர் 3) பாரதியார் 4) சமயகுரவர்கள்
7. சூரியனுக்கு நன்றி செலுத்தும் பண்டிகை எது?
   1) ஆடிப்பிறப்பு 2) தீபாவளி 3) புத்தாண்டு 4) தைப்பொங்கல்
8. பின்வரும் வாழ்வியற் சடங்குகளில் விஜயதசமியன்று அல்லது தைப்பூசத்தன்று தொடங்கக் கூடியது எது?
   1) காது குத்துதல் 2) சோறூட்டல் 3) ஏடு தொடங்குதல் 4) பெயர் சூட்டுதல்
9. பிரதோஷ விரதம் எக் கடவுளுக்குரிய விரதமாகும்?
   1) சிவபெருமான் 2) சக்தி 3) விநாயகர் 4) விஷ்ணு
10. விரதம் அனுட்டிப்பவர் செய்யக் கூடாதது?
    1) திருமுறை ஓதுதல் 2) உணவைச் சுருக்குதல்
    3) தாம்பூலந்தரித்தல் 4) அகத்தூய்மை பேணல்
11. தேவாரப் பாடல்கள் கண்டெடுக்கப்பட்ட தலம் எது?
    1) சிதம்பரம் 2) திருக்காளத்தி
    3) திருக்கோணேஸ்வரம் 4) திருவாவடுதுறை
12. எட்டாம் திருமுறையைப் பாடியவர் யார்?
    1) அப்பர் 2) சம்பந்தர் 3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்
13. இளையான்குடிமாறனார் வீட்டிற்கு இறைவன் எவ்வடிவில் வந்தார்?
    1) குழந்தை 2) சிவனடியார் 3) மூதாட்டி 4) அரசன்

14. "மிடறினில் அடக்கிய வேதியனே" இங்கு மிடறி என்பது

1) கண்டம் 2) தலை 3) பாதவடி 4) வயிறு

15. இறைவனை பித்தன் எனத் தூற்றியவர் யார்?

1) திருநாவுக்கரசர் 2) திருஞான சம்பந்தர்

3) சுந்தரமூர்த்திநாயனார் 4) இளையான்குடிமாறனார்

16. "பல்லாண்டு வாழ்க" என பாடியதும் நிகழ்ந்த அற்புதம் எது?

1) இறந்த குழந்தை உயிர்பெற்றது. 2) ஆலயக் கதவுகள் திறந்தன

3) ஓடாது நின்ற தேர் ஓடியது 4) கொடிய நோய் நீங்கியது.

17. "திருப்புகழ்" எக்கடவுள் மீது பாடப்பட்டது?

1) விநாயகர் 2) சிவபெருமான் 3) உமாதேவியார் 4) முருகன்

18. சண்டேசுவரரை வணங்கும் முறை யாது?

1) தோப்புக்கரணம் போட்டு 2) மூன்று முறை கை கொட்டி

3) அட்டாங்க நமஸ்காரம் செய்து 4) மார்பில் அல்லது சிரசில் கைகளை குவித்து

பின்வரும் இணைப்புக்களில் 19ம், 20ம் வினாக்களின் சரியான இணைப்பு யாது?

A) சம்பந்தர் - கல்லுடன் கட்டி கடலில் இடப்பட்டார்	B) நாவுக்கரசர் - படிக்காசு பெற்று பஞ்சம் தீர்த்தமை
C) சுந்தரமூர்த்தி நாயனார் - நஞ்சுகலந்த பாற்சோற்றை உண்டு உயிர் வாழ்ந்தமை	D) மாணிக்க வாசகர் - கொல்ல வந்த யானை அவரை வணங்கியமை

19. 1) A 2) B 3) C 4) D

20. A) தேவாரம் - ஒளிவளர் விளக்கே

B) திருவிசைப்பா - சீரும் திருவும் பொலியச்

C) திருப்பல்லாண்டு - இடரினும் தளரினும்

D) பெரியபுராணம் - உலகெலாம் உணர்ந்த

1) **A** 2) **B** 3) **C** 4) **D**

(20x1 = 20 புள்ளிகள்**)**

பகுதி - II

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. பின்வரும் தொடக்கத்தையுடைய குறட்பாக்களை எழுதுக.

1. வானின்(று) உலகம் .....

.....

2. ஏரின் உழா அர் .....

.....

3. விசும்பின் துளி வீழின் .....

.....

4. சிறப்பொடு பூசனை .....

.....

(4x 1=4 புள்ளிகள்**)**

2. பின்வரும் திருப்பாடல்களுள் எவையேனும் இரண்டினை வரிக்கிரமமாக எழுதுக.

1. "இடரினும் தளரினும் ....." 2. "ஓசை யொலியெலாம் ....."

3. "சீரும் திருவும் பொலியச் ....." 4. "பித்தாபிறை சூடி ....."

1. .....
.....
.....
.....
.....

(6 புள்ளிகள்**)**

2. .....
.....
.....
.....
.....

(6 புள்ளிகள்**))**

3. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. வெற்றி வேற்கை என்ற நூலை இயற்றியவர் யார்?
.....
2. விநாயகரின் திருவுருவை பிடித்து செய்வதற்கு பொருத்தமான பொருட்கள் 2 தருக.
.....
3. விளக்கேற்றுவதற்கு விளக்குகளைச் செய்ய பொருத்தமான உலோகங்கள் 2 தருக.
.....
4. சிவ சின்னங்கள் 2 தருக.
.....
5. தரும புத்திரன் செய்த யாகத்தின் பெயர் என்ன?
.....
6. குழந்தை பிறந்து எத்தனை மாதத்தில் சோறூட்டல் நடைபெறுகிறது?
.....
7. முருகனுக்குரிய விரதங்கள் 2 தருக.
.....
8. நம்பியாண்டார் நம்பி பூசை செய்த இறைவனின் பெயர் என்ன?
.....
9. பஞ்சபுராணத்தை பண்ணுடனும், பக்தியுடனும் பாடுவதால் மேம்படக்கூடிய இரு விடயங்களைத் தருக.
.....
10. தேவார முதலிகள் மூவரின் பெயரைத் தருக.
.....

(10 x 1=10 புள்ளிகள்**)**

பகுதி - III

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. அ. சைவ சமயம் பேசும் முப் பொருளும் எவை?

.....

ஆ. மூவகைத் திருமேனிகளும் எவை?

.....

இ. மும் மலங்கள் என்று கூறப்படுபவை எவை?

.....

2. அ. திருஞானசம்பந்தர் சோதியுட் கலந்த நாள் எது?

.....

ஆ. திருநாவுக்கரசரை சமணர் கொடுமைப்படுத்த துணை நின்ற மன்னன் யார்?

.....

இ. சுந்தரமூர்த்தி நாயனாரின் மறு பெயர்கள் 2 தருக.

.....

3. அ. ஆலயத்தில் தூலலிங்கம் என்பது எதனைக் குறிக்கின்றது?

.....

ஆ. ஆலயத்தில் செய்யக் கூடிய தொண்டுகள் 3 தருக.

1) ..... 2)..... 3).....

இ. ஆலயம் என்பதன் பொருள் யாது?

.....

4. அ. நாவலர் பெருமான் குறிப்பிடும் விரதம் என்றால் என்ன?

.....

ஆ. தீபாவளிப் பண்டிகை எப்போது கொண்டாடப்படுகிறது?

.....

இ. விரதங்கள் அனுட்டிப்பதன் மூலம் பெறும் நன்மைகள் 2 தருக?

1) ..... 2).....

5. அ. சிவ பெருமான் ஆன்மாக்களுக்காக செய்யும் தொழில்கள் எவை?

1) ..... 2)..... 3).....

ஆ. சிவ பெருமான் ஆன்மாக்களுக்காக அருளிச் செய்த முதனூல்கள் எவை?

1) ..... 2).....

இ. விபூதி தாரணம் எத்தனை வகைப்படும்?

1) ..... 2).....

6. அ. கங்கை ஆற்றை கமண்டலத்தில் அடைத்து பக்கத்தில் வைத்துப் சிவ பூசை செய்த முனிவர் யார்?

.....

ஆ. விநாயகர் என்ற சொல்லுக்கு பொருள் யாது?

.....

இ. விநாயகருக்காக செய்யக் கூடிய வழிபாட்டு முறைகள் 3 தருக?

1) ..... 2)..... 3).....

(6 x 9 = 54 புள்ளிகள்**)**